ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2410/09 - 2024 නොවැම්බර් මස 17 වැනි ඉරිදා - 2024.11.17
2410/09 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

07 ஆவது திருத்தம்

**இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு**

2014, ஒற்றோபர் 11 ஆந் திகதிய மற்றும் 1883/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2024, நவெம்பர் 12.

பகுதி I

திருத்த இலக்கம் 01 - 2016, சனவரி மாதம் 18 ஆந் திகதிய மற்றும் 1950/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 02 - 2016, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய மற்றும் 1981/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 03 - 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 1996/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 04 - 2021, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 2218/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 05 - 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 2277/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 06 - 2023, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதிய மற்றும் 2263/83 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

1A - G 43112 — 06 (2024/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பகுதி II

*11.1.2 மருத்துவ நிர்வாகத் தரத்திற்கான பதவிகளுக்கு நியமிப்பதற்கு உரிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகளின் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை பதிலீடு செய்யப்படுகின்றது. ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப் பெறும்.*

| பதவி தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| 11.1.2.1 பிரதி மருத்துவ நிர்வாகத் தரம் | I. மருத்துவ சேவைப் பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு II இல் பட்டியலிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்புத் தகைமையைப் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தர், III ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி மருத்துவ நிர்வாகத் தரப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார்.<br><br>II. புள்ளி வழங்கல் முறையின் கீழ் மேற்குறித்த அடிப்படைத் தகைமை களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், அதற்கு மேலதிகமாக பின்னிணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்குறித்த அடிப்படைத் தகைமையிலும் கூடிய பட்டப்பின் படிப்புப் பட்டத் தகைமை அல்லது பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ கலாநிதிப் (MD) பட்டத் தகைமை பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தருக்கு அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவருக்கு அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தருக்கு மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>III. திணைக்களத்தில் 08 வருட தொடர்ச்சியான சேவையுடன் (08 வருடகாலம் கணிப்பிடப்படுவது, ஆரம்ப தரத்திற்கு உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்தாகும்.) தரம் II இற்குப் பதவி உயர்வு பெற்ற வினைத்திறன்காண்க தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த மருத்துவ உத்தியோகத்தர்/ பல் சத்திர சிகிச்சை மருத்துவர்/ மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தராதல்.<br><br>IV. பிரதி மருத்துவ நிர்வாகத் தரத்தின் கீழ் கொள்ளப்படும் சமமான பதவிகள் பின்னிணைப்பு III இல் உள்ளடக்கப்படுவதுடன், சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைய காலத்திற்குக் காலம் உருவாக்கப்படும் எந்தவொரு பதவியும் அதில் உள்ளடக்கப்படும்.<br><br>V. வயதெல்லை.- அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது அரசாங்க சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.<br><br>VI. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது. |

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| 11.1.2.2 சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரம் | I. மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு II இல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவ முதுமாணிப் (MSc) (மருத்துவ நிர்வாகம்) பட்டம் அல்லது மருத்துவ முதுமாணிப் (MSc) (சமூக மருத்துவம் அல்லது சமூக பல் மருத்துவம்) பட்டத்தைப் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தர் பின்னிணைப்பு IV இல் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார். |

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| | II. புள்ளி வழங்கல் முறையின் கீழ் மேற்குறித்த அடிப்படைத் தகைமைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், மருத்துவக் கலாநிதிப் (MD) (மருத்துவ நிர்வாகம்) பட்டம் அல்லது மருத்துவ கலாநிதிப் (MD) (சமூக மருத்துவம் அல்லது சமூக பல் மருத்துவம்) பட்டத்தைப் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தருக்கு மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>III. பிரதி மருத்துவ நிர்வாகத் தரத்தில் ஆகக் குறைந்தது 3 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br><br>IV. சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் கீழ் கொள்ளப்படும் சமனான பதவிகள் பின்னிணைப்பு IV இல் உள்ளடக்கப்படுவதுடன், சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைய காலத்திற்குக் காலம் உருவாக்கப்படும் எந்தவொரு பதவியும் அதில் உள்ளடக்கப்படும்.<br><br>குறிப்பு 7.- சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் கீழ் கொள்ளப்படும் அனைத்துப் பதவிகளுக்குமான கட்டாயத் தகைமைகள் பின்னிணைப்பு IV இல் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், குறித்த பதவிகள் சமனான பதவிகளாகக் கருதப்படல் வேண்டும்.<br><br>V. குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருகையில் பின்னிணைப்பு IV இல் பட்டியலிடப்படுள்ள ஏற்புடைய கட்டாயப் பட்டப்பின் படிப்புத் தகைமைகளை விண்ணப்பதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>VI. வயதெல்லை.- உத்தியோகத்தர்களும் தற்போது அரசாங்க சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.<br><br>VII. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டி ருத்தலாகாது. |

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| 11.1.2.3 பிரதி பணிப்பாளர் நாயகம் தரம் | I. மருத்துவ சேவைப் பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு II இல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவ முதுமாணிப் (MSc) (மருத்துவ நிர்வாகம்) பட்டம் அல்லது மருத்துவ முதுமாணிப் (MSc) (சமூக மருத்துவம் அல்லது சமூக பல் மருத்துவம்) பட்டத்தைப் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தர் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி பணிப்பாளர் நாயக தரப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார்.<br><br>II. புள்ளி வழங்கல் முறையின் கீழ் மேற்குறித்த அடிப்படைத் தகைமைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், மருத்துவக் கலாநிதிப் (MD) (மருத்துவ நிர்வாகம்) பட்டம் அல்லது மருத்துவ கலாநிதிப் (MD) (சமூக மருத்துவம் அல்லது சமூக பல் மருத்துவம்) பட்டம் அல்லது சபைச் சான்றிதழ் (மருத்துவ நிர்வாகம்) அல்லது சபைச் சான்றிதழ் (சமூக மருத்துவம் அல்லது சமூக பல் மருத்துவம்) பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தருக்கு மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும். |

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| | III. சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் பல் சத்திர சிகிச்சை மருத்துவர்கள் பிரதி பணிப்பாளர் நாயக தர உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்குத் தகைமையுடையோராவர்.<br><br>IV. பிரதிப் பணிப்பாளர் நாயக தரத்தின் கீழ் கொள்ளப்படும் பதவிகள் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைய காலத்திற்குக் காலம் உருவாக்கப்படும் எந்தவொரு பதவியும் அதில் உள்ளடக்கப்படும்.<br><br>V. வயதெல்லை.- அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது அரசாங்க சேவையில் இருப்பதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.<br><br>VI. இந்தத் தரத்திற்கு ஏற்புடைய பதவியுயர்வுத் திட்டமொன்று இல்லை.<br><br>VII. இந்தப் பிரமாணக் குறிப்பின் 11.1.1 ஆம் பிரிவின் கீழான நியமனங்களுக்கு ஏற்புடைய பொது வழிகாட்டல்களைத் தேவைக்கு ஏற்ப ஏற்புடையதாகக் கொள்ளல் வேண்டும்.<br><br>VIII. இடமாற்றம் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிப் பணிப்பாளர் நாயக தரத்தின் கீழ் கொள்ளப்படும் அனைத்துப் பதவிகளும் இறுதிப் பதவிகளாவதுடன், இடமாற்றங்களுக்கு உட்பட மாட்டாது.<br><br>IX. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.<br><br>குறிப்பு 8.- மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக விஷேட நிலைமைகளாகக் கருதி பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரதிப் பணிப்பாளர் நாயக (பல் மருத்துவ சேவை) பதவிக்கு முதுமாணிப் (MSc) (சமூக பல் மருத்துவ) பட்டம் அடிப்படைத் தகைமையாகக் கருதப்படும். குறித்த தகைமையுடனான உத்தியோகத்தர்கள் காணப்படாத சந்தர்ப்பங்களில் முதுமாணித் (MSc) (சமூக மருத்துவம் அல்லது மருத்துவ நிர்வாகம்) தகைமையுடனான உத்தியோகதர்தர்களும் கவனத்திற் கொள்ளப்படுவர். |
| | குறிப்பு 9.- எவ்வாறாயினும் 2007.04.16 ஆந் திகதிய மற்றும் 1493/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படுகையில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கட்டாயத் தகைமைகள் ஏற்புடையதாகாது. அவர்கள் தாம் தற்போது வகித்துக் கொண்டிருக்கும் பதவிகளை வகிக்க முடியும் என்பதோடு, கட்டாயத் தகைமைகளைக் கவனத்திற் கொள்ளாது அவர்களைப் பின்னிணைப்பு V இன் கீழ் கொள்ளப்படும் வேறு எந்தவொரு பதவிக்கும் நியமிக்கலாம். |

பின்னிணைப்பு IV - சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் கீழான பதவிகளை உள்ளடக்கிய பின்னிணைப்பு IV இன் குறித்த பதவிகளுக்குப் பதவியுயர்த்துவதற்கு "தேவையான கட்டாய கல்வித் தகைமைகள்" நிரலின் கீழ் ஒவ்வொரு பதவிக்கும் ஏற்புடைய கட்டாயத் தகைமை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

| | சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறை | கட்டாயத் தகைமை (திருத்தம் செய்யப்படும் முறை) |
|---|---|---|
| 1 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (சமூக மருத்துவம்/சமூக பல் மருத்துவம்/மருத்துவ நிர்வாகம்) | மருத்துவ முதுமாணி (MSc)/(சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்/மருத்துவ நிர்வாகம்) |
| 2 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (மருத்துவ நிர்வாகம்) | மருத்துவ முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்) |
| 3 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (சமூக மருத்துவம்/சமூக பல் மருத்துவம்) | மருத்துவ முதுமாணி (MSc)/(சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்) |
| 4 | மருத்துவக் கலாநிதி (MD) (சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்) | மருத்துவ முதுமாணி (MSc) (சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்) |

பின்னிணைப்பு V - பிரதி பணிப்பாளர் நாயக தரத்தின் கீழான பதவிகளை உள்ளடக்கிய பின்னிணைப்பு V இன் குறித்த பதவிகளுக்குப் பதவியுயர்த்துவதற்கு "தேவையான கட்டாய கல்வித் தகைமைகள்" நிரலின் கீழ் ஒவ்வொரு பதவிக்கும் ஏற்புடைய கட்டாயத் தகைமை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

| | சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறை | கட்டாயத் தகைமை (திருத்தம் செய்யப்படும் முறை) |
|---|---|---|
| 1 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (சமூக மருத்துவம்/மருத்துவ நிர்வாகம்) | மருத்துவ முதுமாணி (MSc) (சமூக மருத்துவம் அல்லது மருத்துவ நிர்வாகம்) |
| 2 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (மருத்துவ நிர்வாகம்) | மருத்துவ முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்) |
| 3 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (சமூக மருத்துவம்) | மருத்துவ முதுமாணி (MSc) (சமூக மருத்துவம்) |
| 4 | மருத்துவ முதுமாணி (MSc)/ மருத்துவக் கலாநிதி (MD) (மருத்துவ நிர்வாகம்/சமூக பல்/சமூக மருத்துவம் | மருத்துவ முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்/சமூக பல்/ சமூக மருத்துவம்) |

இடைக்கால ஏற்பாடுகள்

சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயக தரத்தின் பதவிகளுக்குத் தெரிவு செய்கையில் முறையே 11.1.2.2 இல் மற்றும் 11.1.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமையை ஏற்புடையதாகக் கொள்ளலானது இந்தத் திருத்தம் செயல்வலுப் பெறும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். குறித்த செயல்வலுப் பெறும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். குறித்த செயல்வலுப் பெறும் தினத்தின் போது ஏற்கனவே பிரதி மருத்துவ நிர்வாக தரத்தின் மற்றும் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தின் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்தத் திருத்தம் செயல்வலுப் பெறும் தினத்திலிருந்து 03 வருட இடைக்காலம் வரை மாத்திரம் பதவிகளுக்குத் தெரிவுசெய்து நியமிக்கையில் பின்வருமாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

I. சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்கு விண்ணப்பிக்கையில் உத்தியோகத்தர் பெற்றுள்ள அதிகூடிய தகைமைக்கு அமைய, மருத்துவ முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்/ சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்) அல்லது மருத்துவக் கலாநிதி (MD) (மருத்துவ நிர்வாகம்/சமூக மருத்துவம்/சமூக பல் மருத்துவம்) ஆகிய இரண்டில் ஒன்றிற்குப் புள்ளிகள் உரித்தாகும்.

II. பிரதிப் பணிப்பாளர் நாயக தரத்திற்கு விண்ணப்பிக்கையில் உத்தியோகத்தர் பெற்றுள்ள அதிகூடிய தகைமைக்கு அமைய, மருத்துவ முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்/ சமூக மருத்துவம்/ சமூக பல் மருத்துவம்) அல்லது மருத்துவக் கலாநிதி (MD) (மருத்துவ நிர்வாகம்/சமூக மருத்துவம்/சமூக பல் மருத்துவம்) ஆகிய இரண்டில் ஒன்றிற்குப் புள்ளிகள் உரித்தாகும்.

EOG 11-0137

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.